# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2091/76 - 2018 ඔක්තෝබර් මස 05 වැනි සිකුරාදා - 2018.10.05

*2091/76 ஆம் இலக்கம் - 2018 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 05 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


## பகுதி IV (அ) - மாகாண சபைகள்

### மாகாண சபை அறிவித்தல்கள்

#### மத்திய மாகாண மாகாண சபை

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தத்தில் எட்டாவது உட்பிரிவின்படி மாகாண சபைகளுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின்படி வெளியிடப்பட்ட 1992 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க மத்திய மாகாணத்தின் பாதைகள், பயணிகள் போக்குவரத்துச் சேவை நியதிச்சட்டத்தின் 24 (2), (1)* (xii) (xiii) *மற்றும் 24 (3) மற்றும் மத்திய மாகாணத்தின் 2000 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க பயணிகள் போக்குவரத்துச் சேவை அதிகார சபை நியதிச்சட்டத்தின் 20 ஆவது பிரிவின் கீழ் பிறப்பிக்கப்பட்ட கட்டளை.*

*1992 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, பாதைகளில் பயணிகள் போக்குவரத்துச் சேவை நியதிச்சட்டத்தின் 24 (2) (1)* (xii), (xiii) *சரத்தினதும் மத்திய மாகாணத்தின் 2000 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க பயணிகள் போக்குவரத்து அதிகார சபை நியதிச்சட்டத்தின் 20 ஆவது சரத்தின் மத்திய மாகாண வீதி அபிவிருத்தி, போக்குவரத்து, மின்சக்தி, எரிபொருள் சக்தி மற்றும் வீடமைப்பு நிர்மாணத்துறை அமைச்சர் எதிரிவீர வீரவர்தன ஆகிய எனக்களிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படி, 2016.10.29 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 1990/48 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்பட்ட பணிப்புரைகள் நீக்கப்பட்டு 2016.10.27 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 1990/27 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானி வெளியிடப்பட்டு மத்திய மாகாண பயணிகள் போக்குவரத்துச் சேவைகள் அதிகார சபையின் "சஹசர" எனும் பெயரில் குறிப்பிடப்படும் புதிய போக்குவரத்து முறை பற்றி வெளியிடப்பட்ட பணிப்புரைகளுக்கு மேலதிகமாக கீழேயுள்ள கட்டளைகள் பிறப்பிக்கப்படுவதுடன் அவை இந்த வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட திகதியிலிருந்து அதிகாரமுடையதாக இருக்குமென்பதை இங்கு விதப்புரைக்கின்றேன்.*

*(1)* (i) *அமைச்சர் அவர்களின் பணிப்புரையில் குறிப்பிடப்பட்டுள்ள திகதியிலிருந்து 36 மாதத்திற்குள் மத்திய மாகாண பயணிகள் போக்குவரத்துச் சேவை அதிகார சபையினால் மாகாணத்திற்குள் பஸ் வண்டி ஓடும் பாதை ஒன்றில் அல்லது பலவற்றில் அல்லது ஒன்றிணைந்து ஓடும் பகுதிகளை இனங்கண்டு அறிவித்து முடிக்க வேண்டும் எனவும்,*

(ii) *அறிவிக்கப்பட்ட ஓடும் பகுதிகள் புதிய முறைகளுக்கு ஏற்ப நிர்வகிப்பதற்காக பஸ் சேவை முகாமையாளர் ஒருவர் நியமிக்கப்பட வேண்டும் எனவும்,*

(iii) *அறிவிக்கப்பட்ட ஓடும் பகுதிகள் ஒன்றில் அல்லது பலவற்றிற்காக அல்லது பதிலீடாக கட்டுப்பாட்டு பகுதி ஒன்று வீதம் நிறுவப்பட வேண்டும்,*

*(2)* (i) *மத்திய மாகாண பயணிகள் போக்குவரத்துச் சேவைகள் அதிகார சபையினால் ஓடும் பாதை அலகுகள் அறிவிக்கப்பட்ட தினத்திலிருந்து அல்லது அதிகார சபையின் மூலம் விசேடமாக குறித்துரைக்கப்படும் கால எல்லைக்குள் அல்லது குறிப்பிட்ட ஒரு பாதையில் அல்லது ஓடு பாதைகள் பலவற்றின் அல்லது அனுமதி பெற்றவர்கள் அவ் ஓட்டுநர் அலகுக்காக அந்த மக்கள் போக்குவரத்துச் சேவை அதிகார சபை மூலம் (1)* ii *க்கு ஏற்ப நியமிக்கப்பட்ட முகாமையாளரினால் நிர்வாகத்தின் கீழ் அனுமதி பத்திரத்தின் அனுமதிக்கப்பட்டுள்ள ஓடும் வழியில்*

அல்லது பல வழிகளில் பயணிகள் போக்குவரத்துச் சேவையில் ஈடுப்படுத்த வேண்டுமெனவும் அம் முகாமையாளரின் மூலம் மக்கள் பயணிகள் போக்குவரத்துச் சேவை அதிகார சபையின் மேற்பார்வையின் கீழ் அவ்வப்போது பணிக்கப்படும் நேரசூசி மற்றும் பணிப்புரைகளுக்கேற்பவும் சேவை தரத்திற்கேற்பவும் புதிய பஸ் வண்டிகளை போக்குவரத்திலீடுப்படுத்த வேண்டுமெனவும்,

(ii) பஸ் வண்டிகளில் மேற்கொள்ளப்படும் பயணிகள் போக்குவரத்து மற்றும் பொருட்கள் போக்குவரத்தும் இலத்திரனியல் டிக்கட் இயந்திரங்களூடாக பெறப்படும் அனைத்து வருமானங்கள் தொழில்நுட்ப கோளாறு காரணமாக இலத்திரனியல் இயந்திரம் அற்று தேடப்படும் டிக்கட் வருமானங்கள் மற்றும் வேறு அனைத்து வருமானங்களும் பயணிகள் போக்குவரத்துச் சேவைகள் அதிகார சபையினால் அனுமதிக்கப்படும் இலங்கை மத்திய வங்கியின் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள வணிக வங்கியொன்றில் "மத்திய மாகாண பயணிகள் போக்குவரத்து அதிகார சபை" பெயரிலுள்ள கணக்கில் வைப்பிலிடப்பட வேண்டுமென்றும்,

(iii) பயணிகள் போக்குவரத்து சேவைகள் அதிகார சபையினால் அனுமதிக்கப்பட்ட நல்ல நிலைமையில் உள்ள ஜி. பி. எஸ். (GPS), சீ. சீ. டி. வி. (CCTV) மற்றும் ஜி. பி. ஆர். எஸ். (GPRS) தொழில்நுட்பத்துடன் கூடிய இலத்திரனியல் டிக்கட் இயந்திரம் பொறிக்கப்பட்டு பயன்படுத்தப்படும் நல்ல நிலைமையிலுள்ள பஸ் வண்டிகளுக்கு மட்டும் பயணிகள் போக்குவரத்திற்கு அனுமதி வழங்கப்பட வேண்டுமெனவும்,

(iv) தொழில்நுட்ப ரீதியில் பழுதடைந்தமை தவிர்ந்த அனைத்து சந்தர்ப்பங்களிலும் பயணிகளிடமிருந்து கட்டணம் அறவிடுதல் இலத்திரனியல் அட்டையூடாக மட்டும் மேற்கொள்ளப்பட வேண்டுமெனவும்,

(v) பஸ் வண்டிகளில் பொருத்தப்பட்டு மற்றும் பாவனைக்கு உட்படுத்தப்படும் இலத்திரனியல் தொழில்நுட்ப உபகரணங்களின் தகவல்கள் மற்றும் தரவுகளை பெற்றுக் கொள்வதற்காக முழுமையான வசதிகளுடனான கட்டுப்பாட்டு பிரிவொன்றை ஆரம்பித்து நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என்பதுடன் அத்தகவல்கள் மற்றும் தரவுகளை கையகப்படுத்திக் கொள்ளல் பாதுகாத்தல் மற்றும் பஸ் சேவைகளின் செயல் திறமைகளுக்காக பயன்படுத்திக் கொள்ள வேண்டுமெனவும்,

(vi) ஒவ்வொரு ஓடும் பாதை அல்லது ஓடும் வழிகள் தொகுதியொன்றில் பஸ் வண்டிகள் சேவையிலீடுப்படுத்தும் ஆகக் கூடிய கிலோ மீற்றர்களின் அளவு மற்றும் அந்தந்த ஓடும் வழிகளில் கிடைக்கும் வருமானம் மற்றும் வழங்கப்படும் பயணிகள் போக்குவரத்து சேவையின் தரத்தின்படி அடிப்படையாகக் கொண்டு அவ்வொவ்வொரு ஓடும் வழி அல்லது ஓடும் வழிகள் தொகுதி ஒன்றின் பஸ் வண்டி உரிமையாளர்களுக்கு பயணத்திலீடுபடுத்தும் ஒரு கிலோ மீற்றருக்கு செலுத்தக் கூடிய ஆகக்கூடிய ரூபாவின் அளவு மத்திய மாகாண போக்குவரத்து அதிகார சபையினால் இடைக்கிடை அறிவிக்கப்பட வேண்டுமெனவும்,

(vii) தமது பஸ் வண்டிகளில் சேவை செய்யும் ஊழியர்களுக்காக ஊழியர் சேமலாப நிதியத்தின் மற்றும் சேவை வழங்கலின் பொறுப்பு நிதியத்தின் பங்களிப்புக் கொடை முறையாக கொடுக்கப்பட்டுள்ளமை பற்றிய சரியான குறிப்பிட்ட ஆவணங்களை சமர்ப்பிக்கும் உரிமையாளர்களுடைய பஸ் வண்டிகளுக்கு மட்டும் போக்குவரத்து அனுமதியை வழங்க வேண்டுமெனவும்,

(viii) ஓடும் வழியில் அல்லது பாதை தொகுதிகளில் போக்குவரத்திலீடுபடுத்தும் பஸ் வண்டிகளில் இலத்திரனியல் தொழில்நுட்ப உபகரணங்கள் பொருத்தப்பட்டதன் பின்னர் 02 மாதங்களுக்கு குறிப்பிட்டபடி போக்குவரத்திலீடு பட்டுள்ளதாக உறுதிப்படுத்தப்படும் பஸ் வண்டிகளுக்கு மட்டும் "சஹசர" போக்குவரத்து முறைக்கு உள்ளடக்கிக் கொள்ள வேண்டுமெனவும்,

(ix) பஸ் வண்டிகள் குழுமமாக "சஹசர" புதிய பெயரினைச் சூட்டப்பட வேண்டும் எனவும்,

(x) ஒரு பாதை கட்டுப்பாட்டுத் தொகுதியின் முகாமைத்துவம் பயணிகள் போக்குவரத்துச் சேவைகள் அதிகார சபையினால் அல்லது அதிகார சபையினால் அனுமதி பெறப்பட்ட முகாமையாளரின் மூலம் மேற்கொள்ளப்படவேண்டுமெனவும்,

(xi) போக்குவரத்துச் சேவைகளில் நல்ல செயற்திறனுடனும் முறையான நுழைவுச் சீட்டு கொடுக்கல் வாங்கல்களும் இடம்பெறுகிறதா என்பது பற்றி பரிசீலனை செய்வது பரிசீலனை குழுக்களை நியமித்து அவர்களுக்கு தேவையான அதிகாரத்தை வழங்குவது பயணிகள் போக்குவரத்துச் சேவைகள் அதிகார சபையினால் மேற்கொள்ளப்பட வேண்டுமெனவும்,

(xii) மக்களின் முறைப்பாடுகளை முறையாக மேற்கொள்வதற்காக முகாமைத்துவத்திற்குப் பொருத்தமான பிரிவொன்று அதிகார சபையின் கீழ் நிறுவப்பட வேண்டுமெனவும்,

(xiii) இலத்திரனியல் கொடுப்பனவு அட்டை பாவனையினை பிரபல்யப்படுத்துவதற்காக பொருத்தமான ஊக்குவிப்பினை பெற்று கொடுக்க வேண்டுமெனவும்,

3. மேலே 1, 2 இல் உள்ள கட்டளைகள் உடனடியாக நடைமுறைப்படுத்தப்படும் விதத்தில் இவ்வர்த்தமானி பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட திகதியிலிருந்து மத்திய மாகாணத்தின் சகல பாதைகளுக்கும் பொருந்தும் விதத்திலும்,

4. சேவை தரக் கட்டுப்பாடும் பயணிகளின் நன்மைகள் தொடர்பாக சகல அதிகாரங்களையும் புதிய சேவைகளை அறிமுகப்படுத்துதல் தொடர்பான சகல தீர்மானங்களையும் எடுப்பது மத்திய மாகாண பயணிகள் போக்குவரத்துச் சேவைகள் அதிகார சபைக்குரியதெனவும்,

5. (i) பயணிகள் போக்குவரத்துச் சேவைகள் அதிகார சபையினால் தொழில்நுட்பம் மற்றும் நிதிக் கணக்காய்வுக்காக தகுதி வாய்ந்த கணக்காளர்களை அறிவித்து போக்குவரத்துப் பிரிவுகளில் கணக்காய்வு செய்யப்பட வேண்டுமெனவும்,

(ii) குறிப்பிடப்பட்ட கணக்காய்வு அறிக்கைகள் பஸ் வண்டி அனுமதிப்பத்திரம் பெற்றவர்களுக்குத் தேவையான சந்தர்ப்பங்களில் பரிசீலனை செய்து பார்க்க வசதிகள் செய்து கொடுக்கப்பட வேண்டும்.

(iii) மேலும் குறிப்பிடப்பட்ட வருடாந்த கணக்காய்வு அறிக்கையை விடயப் பொறுப்பு அமைச்சர் அவர்களின் மூலம் மத்திய மாகாண சபையில் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

எதிரிவீர வீரவர்தன,
மத்திய மாகாண வீதி அபிவிருத்தி,
போக்குவரத்து, மின்சக்தி, எரிபொருள் சக்தி
மற்றும் வீடமைப்பு நிர்மாணத்துறை அமைச்சர்.

த. பெ. இல. 104 மற்றும் 109,
யடிநுவர வீதி,
கண்டி.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.